**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

| **நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)** |
|---|

**ஜனவரி – பிப்ரவரி 2020**

**D011 பண்டைய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** | **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கவிதையின் இரு வடிவங்கள் யாவை?
2. விரிச்சி கேட்டல் என்பதன் பொருள் என்ன?
3. பெண் கொலை புரிந்த மன்னன் யார்?
4. குறுந்தொகையைத் தொகுத்தவர் பெயர் என்ன?
5. ஐங்குறுநூற்றிணைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை?
6. எட்டுத்தொகையில் அகப்புற நூலினைக் கூறுக?
7. குறிஞ்சித்திணையின் உரிப்பொருள் என்ன?
8. முல்லை நில மக்கள் யாவர்?
9. அகநானூற்றின் அடிவரையறை எவ்வளவு?
10. சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் யார்?
11. விறலியின் பாதம் எதற்கு உவமைபடுத்தப்பட்டுள்ளது?
12. வரலாற்றுக் களஞ்சியம் என்று அழைக்கப்படும் நூல்?
13. பாரியின் மகளிர் யாவர்?
14. ஊன்துவை அடிசில் என்பதில் 'ஊன்' என்பதன் பொருள் என்ன?

15. சேர அரசர்களைப் பற்றிய எட்டுத்தொகை நூல் எது?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. 'விளையாடு ஆயமொடு' எனத் தொடங்கும் பாடலின் கருத்துகளைக் கூறுக.
2. கங்குல் வெள்ளம் உணர்த்தும் உணர்ச்சிகளைப் புலப்படுத்துக.
3. மருதத் திணையின் கருப்பொருள்களை எழுதுக.
4. அகநானூற்றுப் பாடல்களின் முறைவைப்பினைக் குறிப்பிடுக.
5. ஆற்றுப்படை என்றால் என்ன?
6. பாணரின் வறுமை நிலையை விவரி.
7. பெருஞ்சோற்று நிலை - குறிப்பு வரைக.
8. பாட்டு, உரைசால் வேள்வி எனப் பெயர் பெறக் காரணம் என்ன?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. அ. நற்றிணைப் பாடல்களில் பயின்றுவரும் உள்ளுறை உவமைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ. குறுந்தொகையில் பெண்பால் புலவர்கள் பாடிய பாடல்களின் கருத்துகளைப் புலப்படுத்துக.

2. அ. ஐங்குறுநூற்றில் திணை மயக்கம் குறித்த செய்திகள் பற்றி விவரிக்க.

(அல்லது)

ஆ. அகநானூற்றின் தலைவன் கூற்றுப் பாடல்கள் உணர்த்தும் கருத்துகளைக் கட்டுரைக்க.

3. அ. கடையெழு வள்ளல்களின் சிறப்பினை விவரிக்க.

(அல்லது)

ஆ. கடல் பிறக்கோட்டிய செங்குட்டவனின் சிறப்புகளைப் பதிற்றுப்பத்தின் வழி நின்று ஆராய்க.

***